# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:48** **தேதி:26.06.2015**

### FORUM முடிவுகளும், அனைத்து ஊழியர்களுக்கும் ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வும் ….

அன்பார்ந்த தோழர்களே,

01.01.2007 முதல் 07.05.2010 வரை பணியமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கு ஏற்படும் ஊதிய இழப்பிணை களைவதற்கு அவர்களுக்கும் 01.01.2007க்கு முன் பணியமர்த்தப் பட்டவர்களுக்கு வழங்கப்பட்டதை போன்ற FITMENT BENEFIT வழங்கப்பட வேண்டும் என்பதையே BSNL ஊழியர் சங்கம் ஆரம்பம் முதல் கோரி வருகிறது. இந்த பிரச்சனை 10.02.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழுக் கூட்டத்திலும் எழுப்பப்பட்டது.

ஆனால் நிர்வாகம், 07.05.2010க்கு முன்னர் பணியில் இணைந்த TTAக்களுக்கு, ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு தொகை வழங்கவும், அதற்கான நிலுவைத்தொகை வழங்குவதற்குமான முன்மொழிவினை நிர்வாகக் குழுவிற்கு அனுப்பி ஒப்புதல் பெற்று, BSNL இயக்குனர் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளதாக தெரிவித்தது. 01.01.2007க்கு பணியமர்த்தப்பட்ட அனைத்து ஊழியர்களுக்கும் 01.01.2007லிலுருந்து நிலுவைதொகையுடன் வழங்க வேண்டும் என்பதே நமது கோரிக்கை என நிர்வாகத்திடம் தெரிவித்தோம். ஊழியர் தரப்பின் முழுக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, இறுதியாக BSNLக்கு வெளி சந்தையிலிருந்து நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே ஊழியர்கள் TTAக்கள் மட்டும் என்பதால் அவர்களுக்கு மட்டும் இந்த பலனை வழங்க நிர்வாகம் முடிவு எடுத்துள்ளதாக நிர்வாகம் தெரிவித்தது.

ஆனால் நமது மத்திய சங்கம் நமது முழுமையான கோரிக்கையான 01.01.2007க்கு பின் பணியமர்த்தப்பட்ட அனைத்து ஊழியர்களுக்கும் 30% FITMENT BENEFIT வழங்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தும்.

**FORUM முடிவுகள்:-**

1. **மாதம் முழுவதும் பிரச்சாரம் என்பது மேலும் ஒரு மாதத்திற்கு நீட்டிப்பு:-** 26.06.2015 அன்று கூடிய FORUM கூட்டத்தில் இரவு 9 மணி முதல் காலை 7 மணி வரை இலவச அழைப்பு திட்டத்தை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தி தரைவழி தொலைபேசி எண்ணிக்கைகளை அதிகப்படுத்த மாதம் முழுவதும் பிரச்சாரத்தின் அமுலாக்கம் தொடர்பாக பரிசீலித்தது. விரிவான விவாதத்திற்கு பின் இந்த பிரச்சாரத்தை மேலும் ஒரு மாத காலம் நீட்டிக்க முடிவு செய்யப்பட்டது. இந்த பிரசாரத்தில் நிர்வாகத்தின் சமீபத்திய அறிவிப்பான “ரோமிங்கில் இலவச INCOMING” திட்டத்தையும் பிரபலப்படுத்த முடிவு செய்யப்பட்டது. எனவே அனைத்து மாவட்ட செயலர்களும், இந்த பிரச்சாரம் வலுவாக நடைபெற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
2. **மாநில மாவட்ட FORUMகள் உடனடியாக கூட வேண்டும்:-** மாதம் முழுவதும் பிரச்சாரம் என்கின்ற இயக்கத்தை அமுலாக்குவதில் மாவட்ட, மாநில FORUMகள் கூடுதல் கவனம் செலுத்தாததற்கு 26.06.2015 அன்று கூடிய FORUM கூட்டம் தனது அதிருப்தியை பதிவு செய்தது. இது வரை இந்த பிரச்சாரம் அமுலாக்கம் தொடர்பாக எந்த ஒரு தகவலும் அகில இந்திய சங்கங்களுக்கு வரவில்லை. எனவே அந்தக் கூட்டத்தில் 03.07.2015க்கு முன்னர் மாநில அளவிலான FORUM கூட்டங்கள் நடைபெற்று இந்த பிரச்சரம் வெற்றிகரமாக

அமுலாக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகளை இறுதி செய்ய வேண்டும். அதே போன்று மாவட்ட FORUMகள் 06.07.2015க்கு முன்னர் கூடி இறுதிப்படுத்த வேண்டும். இந்த சலுகைகளை பயன்படுத்தி நமது வாடிக்கையாளர் எண்ணிக்கையை உயர்த்த மாவட்ட மாநில நிர்வாகங்கள் எந்த ஒரு செயலிலும் ஈடுபடாமல் இருப்பதை CMD BSNLக்கு ஒரு கடிதம் எழுத FORUM முடிவு செய்துள்ளது.

3. **சரியாக பயன்படுத்தப்படவில்லை எனில் இலவசங்கள் நஷ்டங்களாக மாறிவிடும்**:- சமீபத்தில் BSNL நிர்வாகம் இரண்டு தைரியமான முடிவுகளை எடுத்துள்ளது. அது தரைவழி தொலைபேசிகளில் ”இரவு 9 முதல் காலை 7 வரை” இலவச அழைப்புகள் என்பதும், “ரோமிங்கில் இலவச INCOMING கால்கள்” என்பதுமே அவை. இந்த நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதோடு, நிறுவனத்தின் புகழும் பெருமளவில் வளர்ந்துள்ளது. இந்த இரண்டு சலுகைகளால் சில ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை நிறுவனம் இழக்க வேண்டி இருக்கும் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. இந்த நஷ்டத்தை ஈடுகட்டுவதற்கு, நாம் நமது வாடிக்கையாளர் பலத்தை கணிசமாக கூட்டுவதே ஒரே வழி. எனவே நிறுவனத்தின் ஊழியர்களாகிய நாம் இரண்டு வகை தொலை பேசிகளிலும், நமது வாடிக்கையாளர் எண்ணிக்கையை கூட்டுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும். எனவே நமது வாடிக்கையாளர் எண்ணிக்கையை பெருமளவிற்கு உயர்த்த முழுமையாகவும் திறமையாகவும் நாம் அடுத்த ஒரு மாத காலத்தை பயன்படுத்த வேண்டும்.

4. **ஆகஸ்ட் மாதத்தில் ”அஞ்சல் அட்டை இயக்கம்”**:- BSNLன் புத்தாக்கத்திற்காக அரசாங்கம் எந்த ஒரு அர்த்தமுள்ள நடவடிக்கையையும் எடுக்காதத்தற்கு தனது அதிருப்தியை 26.06.2015 அன்று கூடிய FORUM கூட்டம் தெரிவித்தது. இரண்டு நாட்கள் வேலை நிறுத்தம் மற்றும் DOT செயலருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை ஆகியவை நடைபெற்று கிட்டத்தட்ட 2 மாத காலம் கடந்து விட்டது. 78.2% பஞ்சப்படி இணைப்பு தவிர்த்து வேறு எந்த ஒரு பிரச்சனையிலும் முன்னேற்றம் ஏதும் இல்லை. நமது வாடிக்கையாளர் தளத்தை அதிகப் படுத்துவதற்காகவே நாம் ஜூலை மாதம் முழுவதையும் பயன்படுத்துவோம். ஆனால் அதே சமயம் நாம் நீண்ட காலம் அமைதியாக இருந்துவிடக்கூடாது என FORUM முடிவு செய்துள்ளது. எனவே ஆகஸ்ட் மாதத்தில் “அஞ்சல் அட்டை இயக்கம்” நடத்துவது என FORUM முடிவெடுத்துள்ளது. இந்த பிரச்சாரம் ஆகஸ்ட் 10ஆம் தேதி முதல் 22ஆம் தேதி வரை நடைபெற வேண்டும். BSNLன் புத்தாக்கத்திர்காக தேவையான் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி மத்திய தொலை தொடர்பு அமைச்சருக்கு ஓவ்வொரு ஊழியரிடமிருந்தும் ஒரு அஞ்சல் அட்டை அனுப்பப்பட வேண்டும். “HONOURABLE MINISTAER OF COMMUNICATIONS & IT IS REQUESTED TO IMMEDIATELY SETTLE THE DEMANDS SUBMITTED BY THE FORUM, FOR THE REVIVAL OF BSNL” என்ற வாசகங்கள் அந்த அஞ்சல் அட்டையில் இருக்க வேண்டும்.

அஞ்சல் அட்டையில் ஒவ்வொரு ஊழியரும், தனது பெயர், பதவி மற்றும் SSA ஆகியவற்றை எழுதி கையெழுத்திட்டு அனுப்ப வேண்டும். மாநில மற்றும் மாவட்ட அளவிலான FORUMகள் இது தொடர்பாக திட்டமிட வேண்டும். நாம் இந்த அஞ்சல் அட்டை இயக்கத்தி வெற்றிகரமாக்குவோம். அனைத்து 2.25 லட்சம் BSNL ஊழியர்களும் ஒரு அஞ்சல் அட்டை அனுப்புவதை நாம் உறுதி செய்வோம். BSNLன் புத்தாக்கத்திற்கு ஊழியர்களாகிய நாம் எவ்வளவு உறுதியாக இருக்கிறோம் என்பதை நாம் அமைச்சருக்கும் அரசாங்கத்திற்கும் புரிய வைப்போம்.

வாழ்த்துக்களுடன்

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**

**மாநில செயலாளர்.**